දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල, )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )TA/SP/AD/11/2017
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date ) 2019.08

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றறிக்கை கடித இலக்கம் : 02 - 104 /2019

மத்திய அரசின் கீழுள்ள விஷேடத்திட்ட தலைவர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு,

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் உணவு நிர்வாகப்பிரிவின் உதவிப்பணிப்பாளர் (உணவு மற்றும் ஔடதங்கள்) பதவிகள் இரண்டிற்கான (02) வெற்றிடங்களை நிரப்புதல்.**

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் உணவு நிர்வாகப் பிரிவில் நிலவுகின்ற உதவிப் பணிப்பாளர் பதவிகள் இரண்டிற்காக மத்திய அரசின் கீழ் சேவையாற்றுகின்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உணவு மற்றும் ஔடத பரிசோதகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. தகைமைகள் :-

(அ) பொது சுகாதார பரிசோதகர்களுக்கான லண்டன் ரோயல் ஹெல்த் சங்கத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது களுத்துறை தேசிய சுகாதார நிறுவனத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இறைச்சி வகைகள் மற்றும் ஏனைய உணவுகள் பரிசோதகர்களுக்கான லண்டன் ரோயல் ஹெல்த் சங்கத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது தேர்ச்சிக் சான்றிதழை பெற்றிருத்தல் அல்லது உணவு மற்றும் ஔடத பரிசோதித்தல் தொடர்பாக மூன்று மாத பயிற்சியொன்றின் பின்னர் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

(இ) உணவு மற்றும் ஔடத பரிசோதகராக 10 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(ஈ) பயிற்சி வழங்குதல், உணவு நிர்வாக வேலைத் திட்டங்களை முகாமைத்துவப் படுத்தல், சட்ட வரைபுபடுத்தல், ஏற்றுமதி/இறக்குமதி பரிசோதித்தல் நடைமுறை, நாளாந்த நடை முறைகள் தொடர்பான அனுபவங்கள் என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

(உ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு 05 வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

02. சம்பள அளவு :

2016.02.25ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய MT 08 – 2016 சம்பள பிரிவிற்குரிய ரூபா 50,200 – 10 x 1345 – 8 x 1630 - 76,690 சம்பள அளவின் இரண்டாம் சம்பள நிலைக்கு அமர்த்தப்பட்டு, தாபன விதிக் கோவையின் VII வது அத்தியாயத்தின் 5 வது பிரிவிற்கு அமைய சம்பளம் தயாரித்து அச்சுற்றறிக்கையின் உப அட்டவணை II இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

03. வயதெல்லை:

ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவது ஏற்கனவே அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் என்பதால் அதிகூடிய வயதெல்லை உரித்தாகாது.

04. சேவைக்கு இணைக்கும் முறை :

வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்காக தகைமையுடையவர்களை தெரிவு செய்வதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூல பரீட்சையொன்றின் ஊடாக தெரிவு செய்யப்படுவதுடன், அப்பரீட்சை கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாகும்.

1. உளச்சார்பு - 01 மணித்தியாலயம்.
2. விடயம் தொடர்பான வினாப்பத்திரம் - 02 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு வினாப்பத்திரங்களுக்கும் 100 புள்ளிகள் என்பதுடன், சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். திறனாய்வு வினாத்தாள் உணவுச் சட்டத்துடன் தொடர்பாக தயாரிக்கப்படும்.

05- சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-

இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத்துடன் கூடியதாகும். மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுவதால். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்தப்படல் வேண்டும்.

06. விண்ணபங்கள் சமர்ப்பிக்கும் முறை:-

I. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பதாரிகளினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தமது நிறுவனத் தலைவர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். நிறுவனத் தலைவரினால் தமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உரிய உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து சரி கண்டதன் பின்னர் சான்றுறுதி செய்தல் வேண்டும். அது நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும்.

II. விண்ணபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினால் 2019/9.16 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு "சுவசிறிபாய", 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு -10 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதித்து கிடைக்கும் விண்ணப்பங்கள் அல்லது பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அல்லது பிழையான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். அது தொடர்பாக பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் தபாலில் காணாமல் போதல் தொடர்பாக் இவ் அமைச்சு பொறுப்பு ஏற்காது.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் விதிமுறைகளுக்கு அமைய,

செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு